# கண்ணகை அம்மன்

## ஊர் சுற்றுக் காவியம்



தொகுப்பு :
**பாலசுகுமார்**

அனாமிகா வெளியீடு








# கண்ணகை அம்மன்
# ஊர்சுற்றுக்காவியம்

தொகுப்பு

**பால சுகுமார்**

**அளவெட்டியூர்**

**அமரர். ஜெகநாதன் முத்தையா அவர்களின்**

**31ம் நாள் நினைவாக**

**இந்நூல்...**


**அனாமிகா வெளியீடு**

**மட்டக்களப்பு**

அனாமிகா வெளியீடு - 5

நூல் : கண்ணகை அம்மன் ஊர்சுற்றுக்காவியம்

தொகுப்பு : பாலசுகுமார்

பதிப்பு : 2022 பெப்ரவரி

வெளியீடு : அனாமிகா பதிப்பகம், மட்டக்களப்பு.

வெளியீட்டில் உதவி : வி.மைக்கல்கொலின் (ஆசிரியர் - மகுடம்)

# பதிப்புரை

## கண்ணகி ஊற்சுற்று காவியம் அல்லது கண்ணகை உடுக்கு சிந்து

ஈழத்தில் வடக்கிலும் கிழக்கிலும் கண்ணகி தொடர்பான பல சிற்றிலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அவை சிந்து, கும்மி, வசந்தன், காவியம் என பல வடிவங்களில் பயில் நிலையில் உள்ளன. கண்ணகி ஊர் சுற்று காவியத்தை முதன் முதலில் பதிப்பித்த பண்டிதர்.வி.சி. கந்தையா அவர்கள் கண்ணகி வழக்குரையில் பிற்சேர்க்கையாக கண்ணகி ஊர்சுற்று காவியத்தை இணைத்துள்ளார். அவர் தன் குறிப்பில் இப்படி சொல்கிறார்.

“மட்டக்களப்பு தமிழகமெங்கும் கண்ணகை அம்மன் சடங்கு நடைபெறும் நாட்களில் பூசனை தோறும் படிக்கப் பெறும் அதி முக்கியம் வாய்ந்தவை இந்த ஊர்சுற்று காவிய பாடல்கள் உடுக்கு சிந்து என்றும் ஊர்சுற்று காவியம்வழங்கப் பெறும்” ஊர்சுற்று காவியம் நன்கு தமிழறிந்த புலவராலேயே பாடப் பட்டிருக்கிறது. அதோடு ஒவ்வொரு ஊரிலும் உள்ள கண்ணகி பற்றி தனித்தனியான பாடல்களின் மூலம் சிறப்பு சொல்கிறது.

“திங்கள் போலும் திரு நுதலுடையாளைச்
செந்தாமரை முகத் தாளைஒப் பாளைப்
பொங்கு புகழாலுயர்ந்த பொற்றிருவைப்
பொய்யென்ன மெய்யாக வந்துதித்தவளைத்
தங்கள் பழி கொள்ளென்று பாண்டியன் முன்னே
சத்துரு தனை முடித்து உயிர் மீள வந்து
அங்கணாமக்கடவை தன்னில் வாழ் கண்ணகையார்
அடித் தாமரைப் பாதம் நாளும் மறவேனே”

**மொத்தமாக 72 பாடல்கள் கொண்ட ஊர்சுற்று காவியம்**

“தாயும்நீ தந்தை நீ அல்லாம லெங்களிட
சஞ்சலம்தீற்பதற்கே ஒருவருண்டோ
நீயல்லால் வேறு துணை தமியேனுக்குண்டோ
நிச்சயமாக அருள் தந்துதவி புரிவாய்
ஏய்தோர் செல்வமும் செனெல்லின் விளைவும்
இன்பமுடனே தந்து எங்கள் துயர் தீற்பாய்
காயாம்பூ மேனியன் தங்கையென வந்த நீ
களுவாஞ்சி நகரிலுறைகின்ற கண்ணகையே”

களுவாஞ்சிக்குடியிலிருக்கும் கண்ணகையை இப்படி வர்ணிக்கிறது.

ஊர்சுற்று காவியம் கிழக்கில் அமைதுள்ள கண்ணகி கோயில்களை இப்படி வரிசப்படுத்துகிறது.

"பத்தியொடு வருவோர்கள் இடரகல அருள் கோண்டு
பண்டுசெறி தம்பிலுவில் பட்டிமா நகரம்
மொய்த்த புகழ் வீரமுனைகல்முனை கல்லாறு
மகிழூர் செட்டிபாளயம் எருவில் மண்முனையூரும்
வைத்த மகிழடிச்சோலை முதலைக் குடா
வளமை வரு புதுக்குடி நகரமொடு வந்தாறு மூலை
இத்தனை தலங்களிலும் அங்கணாமங்கடவை
என வந்து காரைநகர் இனிதிருந்தவளே"

இதைப் பாடிய புலவர் தான் அறிந்த கண்ணகை கோயில்களையே வரிசைப்படுத்துகிறார். ஆனால் இவற்றை விட இன்னும் பல கண்ணகை கோயில்கள் உள்ளன. வரலாற்றின் வழியில் புதிது புதிதாய் உருவாகியிருக்கின்றன. பல கோயில்கள் பாரம்பரியமாக பல ஊர்களில் நீண்ட நெடிய வரலாறு கொண்டிருந்தாலும் அவை பற்றி அறியாமல் இருந்திருக்கலாம், அதனால் ஊர் சுற்றுக் காவியத்தில் அவை இடம் பெறாம போயிருக்கலாம் என நான் நினைக்கிறேன்.

நான் அறிந்தவரையில் கண்ணகி ஊர் சுற்றுக் காவியம் தனியாக பதிப்பிக்கப்படுவது இதுவே முதல் முறையென. நம் மத்தியில் இருக்கின்ற இத்தகைய சிற்றிலக்கியங்கள் எல்லோரது கைகளுக்கும் போய்ச் சேர வேண்டும் அந்த வகையில் இன்று அனாமிகா பதிப்பகம் யாழ்ப்பாணம் அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சிட்னியை வசிப்பிடமாகக் கொண்டவருமான அமரர் ஜெகநாதன் முத்தையா அவர்களின் நினைவாக வெளியிடுகிறது.

ஈழத் தமிழ் இலக்கிய மரபு இத்தகைய இலக்கியங்களால் நம் கிராமத்து நினைவுகளும் பண்பாட்டியல் கூறுகளும் சொல்லப் படுகின்றன அந்த வகையில் இந்த நூல் முக்கியம் பெறுகிறது.

நீத்தாரை நாம் நினைவு கொள்ளும் போது இத்தகைய முயற்சிகள் நம் மரபில் நீட்சியாய் வருங்காலத்துக்கும் உரியதாய் உயர்வு காணும் மட்டக்களப்பு கண்ணகி வழிபாடு பற்றி கிழக்கின் மூத்த அறிஞரான திருவாளர் மூனாக்கானா அவர்கள் ஒரு கட்டுரையில் பின் வருமாறு கூறுவார்

**"மட்டக்களப்பில் கண்ணகி வழிபாட்டு முறைகள் - மூனாக்கானா"**

கடல்சூழ் இலங்கைக் கயவாகு மன்னனால் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட கண்ணகி வழிபாடானது இலங்கையின் கிழக்குக் கரையோரக் கிராமங்களில்

தான் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட முப்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் கண்ணகி கோயில்கள் உண்டு. இவற்றில் ஆரையம்பதி கிராமமும் ஒன்றாகும். கண்ணகி பற்றிய பழைய காவியங்கள் தோத்திரப் பாடல்களிலும், குயில் வசந்தன் பாடல்களிலும் ஆரைப்பற்றை என்ற பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆனால் மண்முனை என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது இங்கு கண்ணகி கோயிலில்லை. இதற்குக் காரணம் பல நூற்றாண்டுகளுக்கு முன் உலக நாச்சியாரின் இராச தானியாக இருந்த மண்முனையில் சில நூற்றாண்டுகளுக்கு முன் ஏற்பட்ட 'வைசூரி' என்னும் பெருநோய் காரணமாக அங்கிருந்த மக்கள் பல ஊர்களிலும் குடியேறினர்.

காத்தான்குடியிருந்த ஆரைப்பற்றைப் பகுதியில் இந்நோய் இல்லாதிருந்த படியால் மண்முனையிலிருந்து ஏராளமான மக்கள் இங்கு குடியேறினர். இவர்களே மண்முனைக் கண்ணகி அம்மன் கோயிலிலிருந்த புனித சின்னங்களை தாளங்குடாவிலிருந்த ஒரு மூதாட்டியிடம் கையேற்று ஆரைப்பற்றையில் கோயில்கட்டி பிரதிஷ்டை செய்து வருடா வருடம் விழாவெடுத்து வந்ததாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

கோயில் கிரியைகளெல்லாம் ஆகம முறைப்படியும் பத்ததி முறைப்படியுமே நடைபெறுவது வழக்கம். அம்மன் கோயில்களிலெல்லாம் பெரும்பாலும் பத்ததி முறைப்படியே கிரியைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இக் கிரியைகளை சடங்கு என்றும், கிரியைகளை செய்யும் பூசாரிமார்களை கட்டாடியார் என்றும் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்கள். இவ்வூரில் பல குடியினர் இருந்தாலும் 'பொன்னாச்சி' குடியிலுள்ளவர்களே கட்டாடியாராக கிரியை செய்யும் உரிமை உண்டு. இக்கோயிலின் ஆரம்ப கட்டாடியாராக இருந்தவர் 'பத்தக்' கட்டாடியார். இவரைப் பற்றிய ஒரு கர்ண பரம்பரைக் கதை உண்டு. இவர் படிப்பறிவில்லாதவர். பத்ததி முறைகளோ, மந்திரங்களோ இவருக்குத் தெரியாது.

இதன் காரணமாக இவர் கட்டாடியாராக வர மறுத்துவிட்டார். ஒருநாள் இவரின் கனவிலே அம்மன் தோன்றி, நீ தான் எனக்குப் பூசை செய்ய வேண்டும். நாளைக்கே வந்து பூசை செய் எனக் கூறி இவரது நாவில் அட்சரங்களை எழுதியதாக முன்னோர் கூறியுள்ளனர். இதன்படி இவர் அடுத்த நாள், நீராடி புத்தாடை உடுத்து புனிதத் தன்மையோடு கோயிலுக்குச் சென்றதும், கோயில் கதவு தானாகத் திறந்ததாகவும், விளக்குகள் தானாக எரிந்ததாகவும், மணி ஓசை சிலம்போசை, அம்மானைக் காயோசைகள் கேட்டதாகவும் உடனே கட்டாடியார் உணர்ச்சிவசப்பட்டு மந்திரங்களைக் கூறிப் பூசை செய்ததாகவும் முன்னோர்கள் கூறியுள்ளனர். தற்போது கட்டாடியாராக இருப்பவர் பொன்னாச்சி குடியைச் சேர்ந்த க. இளையதம்பியாராகும்.

உதவிக் கட்டாடியாராக இருப்பவர் த. மகேஸ்வரன் என்பவர். இனிச் சடங்கு முறைகளைப் பற்றிக் கவனிப்போம். திருக்கதவு திறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பிருந்தே ஊரவர்கள் தங்கள் தங்கள் வீடு வாசல்களையும் வீதி, ஒழுங்கைகளையும் சுத்தம் செய்து வைப்பார்கள். கதவு திறந்த பின், மாவிடித்தல், நெல்குற்றுதல், அம்மியில் தட்டுதல் அரைத்தல், திருமணங்கள் போன்ற சுபகாரியங்கள், வெளியூர்ப் பயணங்கள் இவற்றை நிறுத்தி விடுவார்கள். திருக்கதவு திறத்தலோடு எட்டு நாட்கள் இங்கு விழா நடைபெறும். கலியாணச் சடங்கு, பச்சை கட்டிச் சடங்கு, கப்பல்காரர் சடங்கு திருக்குளிர்ச்சி என்பன சிறப்பாக நடைபெறும்.

கலியாணச் சடங்கு கோவலருக்கும் கண்ணகிக்கும் கலியாணம் நடைபெறுவதாக அமையும். அன்று பிற்பகல் பூசைப் பொருட்களோடு, கட்டாடியார், தெய்வக்காரர்கள், உதவியாளர்கள் பொதுமக்கள் ஊர்வலமாகச் சென்று, புனிதமான இடத்தில் நிற்கும் பூவரசு மரத்தின் கீழ் மடை வைத்து பூசை செய்து, அதிலுள்ள கம்பு கீழே விழாமல் வெட்டி வீழ்த்தி பட்டை உரித்து திருநீறு மஞ்சள் குங்குமம் பூசி வெண்ணிற ஆடையால் மூடி ஊர்வலமாகக் கோயிலுக்குக் கொண்டு வருவார்கள். அதைக் காலாக நாட்டி அலங்கரித்து கலியாணச் சடங்கை நடத்துவர். அன்றிரவு ஆரைப்பற்றைத் தெருப்பாகையினர் கூறை தாலிகளை மேளதாளத்தோடு ஊர்வலமாகக் கொண்டுவருவர். ஏராளமான பொதுமக்கள் பலகாரப் பெட்டிகள் கொண்டுவருவர். கலியாணச் சடங்கு முடிந்ததும் கலியாணப் பலகாரங்களையும், பானக்கத்தையும் பெற்றுக்கொண்டு அடியார்கள் வீடு திரும்புவர். பொதுமக்களின் சடங்குகளல்லாமல் சில தனிப்பட்டவர்களின் சடங்குகளும் உண்டு.

கலியாணச் சடங்குக்கு முதல் நாள் கதிரேசர் அவர்களின் சடங்காகும். கலியாணச் சடங்குக்குப் பின்னுள்ள இரு சடங்குகளில் கப்பல்காரர் சடங்கை ஆரைப்பற்றைத் தெருவிலுள்ள ஒரு குழுவினரும், பச்சை கட்டிச் சடங்கை நடுத் தெருவிலுள்ள ஒரு குழுவினரும் தங்களது பணச் செலவிலேயே செய்து கொண்டு வருகின்றனர். இச்சடங்குகளுக்கு இப்பெயர்கள் வந்ததற்கான காரணங்கள் தெரியவில்லை.

கண்ணகி கால் சிலம்புக்கு நாகமணி கொண்டு வருவதற்காக கப்பலேறிச் சென்று வெடியரசனை தோற்கடித்து நாகராசனிடம் நாகமணி பெற்று வந்த மீகாமன் பரம்பரையினரை ஞாபகப்படுத்தி கப்பல்காரர் சடங்கு என்றும், கண்ணகி மதுரை வந்து சேர்ந்த நாள் தொடக்கம், சேர நாடு போகும் வரையும் அவர்களின் உணவுக்காக பச்சை அரிசியும் பச்சைக் காய்கறிகளும் (பச்சைப்படி) கொடுத்து காப்பாற்றியதை ஞாபகப்படுத்தி பச்சை கட்டிச் சடங்கு என்றும் பெயர்கள் வந்ததோ என எண்ண இடமுண்டு. இச்சடங்குகளில் கப்பல்காரர் சடங்கை ஆரைப்பற்றைத் தெருவிலுள்ள

ஒரு குழுவினரும், பச்சை கட்டிச் சடங்கை நடுத்தெருவிலுள்ள ஒரு குழுவினரும் தங்கள் சொந்தச் செலவில் செய்து கொண்டு வருகின்றனர்.

இச்சடங்குகளில் சிறப்பு நிகழ்வு என்னவென்றால் ஏராளமான தெய்வக்காரர்கள் உருக்கொண்டு ஆடி, சில பக்தர்களுக்கு அவர்களின் துன்பங்களையும் அதற்குச் செய்ய வேண்டிய பரிகாரங்களையும் சொல்வர். இதைக் கட்டுச் சொல்லுதல் என்று குறிப்பிடுவர். தெய்வங்கள் ஆடி தங்கள் தங்களுக்கு விருப்பமான பலிகளைப் பெற்றுக் கொண்டு இயல்பு நிலைக்குத் திரும்பி விடுவர். பலிகளில், மடைப் பலி, அக்கினிப் பலி, முக்கண்ணன் பலி, சாட்டைப் பலி, இரத்தப் பலி எனப் பலவகை உண்டு. மடைப் பலி என்பது ஒரு தாம்பாளத்தில் பாக்கு வெற்றிலை பழம் மேலே கற்பூரம் கொளுத்தி உதவிக் கட்டாடிமார் மந்திரங்களை உச்சரித்ததும் தெய்வம் ஓடிவந்து அதன் மீது முகத்தை வைத்து சாந்தியாகி விடுவது. அக்கினிப் பலி என்பது எரிகின்ற விளக்குத்திரி அல்லது கற்பூரத்தை கொளுத்தி வாய்க்குள் வைத்து சாந்தியாவது. முக்கண்ணன் (தேங்காய்) பலி என்பது பூமியிலே யந்திரம் கீறி அதற்குள்ளே அட்சரங்கள் எழுதி அதன் மேலே தேங்காயை வைத்து தேங்காய் மீது கற்பூரம் கொளுத்தி மந்திரம் செபித்து தேங்காயை இரு பாதிகளாக வெட்டியதும் அதில் விழுந்து சாந்தியடைவது. சாட்டைப் பலி என்பது வெடிப்பஞ்சினால் திரிக்கப்பட்ட கயிற்றினால் (சாட்டைக் கயிறு) இரு வாலிபர்கள் தெய்வக்காரர்களின் மணிக்கட்டுகளிலும் கரண்டிக் கால்களிலும், வேகமாக அடிப்பது. சில தெய்வங்கள் ஐம்பதுக்கும் மேற்பட்ட அடிகளைப் பெற்றுக் கொண்டு சாந்தியடைவர். நர பலி என்பது பூசாரியார் தன் கையிலே கத்தியால் கீறியதும் அதிலிருந்து வரும் இரத்தத்தைக் குடித்து சாந்தியடைவர். அடுத்த நாள் நடைபெறுவதுதான் திருக்குளிர்த்தி விழா, திருவிழாக்களில் கடைசிநாள் நடைபெறும் தீர்த்தத் திருவிழா போல, தெய்வம் அருள் பாலிக்கும் விழாவாகும்.

இந்த விழாவை சில ஊர்களில் பூரணையை அடுத்து வரும் திங்கட்கிழமையிலும், சில ஊர் மக்கள் பூரணைத் திதியிலும் கொண்டாடுவர். வைகாசித் திங்கள் வருவோம் என்று கூறியதால், சிலர் திங்கள் வாரத்தில் நடத்துகிறார்கள். வைகாசி மாதத்தில் பல திங்கள் வாரங்கள் வருவதால் எந்த வாரத்தைத் தெரிவு செய்வது? எனவே இது பொருத்தமற்றதாகும். ஆரையம்பதி கண்ணகி அம்மன் குளிர்த்தி விழா பூரணைத் திதியிலேயே நடைபெறுவது வழக்கம்.

நன்றியுடன்

**பால.சுகுமார்,** லண்டன்,
மேனாள் புல முதன்மையர்
கலை கலாசார பீடம் - கிழக்குப் பல்கலைக்கழகம்.

# கண்ணகை அம்மன்
## ஊர் சுற்றுக் காவியம்

மட்டக்களப்பு தமிழகமெங்கும், கண்ணகை அம்மன் சடங்கு நடைபெறும் நாட்களிற் பூசனை வேளைதோறும் படிக்கப்பெறும் அதி முக்கியம் வாய்ந்தவை இந்த ஊர்சுற்றுக் காவியப் பாடல்கள். உடுகுச் சிந்து என்றும் ஊர்சுற்றுக் காவியம் வழங்கப்பெறும். 'கண்ணகை அம்மன் குளுத்திப்பாடல் முதலிய நான்கு நூல்கள்' என்ற தலைப்பில் முன்னரே எம்மாற் பிரசுரிக்கப்பெற்றிருக்கும் நூலில் ஊர்சுற்றுக் காவியமும் இடம் பெற்றுள்ளது எனினும், எமக்குக் கிடைத்த கண்ணகி வழக்குரை ஏடுகள் பலவற்றிலே, பிற்சேர்க்கையாகக் காணப்படும் இந்நூலை, கண்ணகி வழக்குரை படிப்போரின் வசதியும் நோக்கி இங்கே தனியாகத் தருகின்றேன்.

**காப்பு**

வீசுகர மேகநிற தேவநுத லாள்கருணை
    மேவுமத வாரண விநாயக விேனாதா
சேசுருதி மேருவினிற் பாரதமிழ் கோடுகொடு
    சேமமுற வேயெழுது சேர்கருணை யோனே
கூசுமதி சேர்நுதலி கோமள வலிக்கோர்
    கொஞ்சுமத லைக்களப குஞ்சர முகத்தோய்
பேசுதமி ழின்கதைக ளேபாடு தற்கு [1]உறு
    பிழைகள்வா ராமல்அருள் பேழைவயி றோனே.

---

1. ஒரு

**நூல்**

ஒற்றைநவ ரெட்ணமணி ஒப்பரிய சுத்தனை
ஒப்பெழு தவப்பெரிய தொப்பைவயி றப்பனை
சித்திரமெ னத்தகுதி யப்பெரிய வெற்பனைச்
சித்தியென அத்திமுக வித்தக மருப்பனை
முத்தகு மெனத்தகு முருப்பான மூர்த்தியை
மூவருக் கருளும்வகை செய்தருளு மூர்த்தியை
மத்தமத மொத்தபனை யொப்பனைய கையனை
மகாகணப திக்கடவுள் தன்னைமற வேனே. 1

சீரிதா னபணி யாரமவல் எள்ளுண்டை
செந்தே னுடன்பயறு செவ்விள நீரும்
வாரியே குடவயிறு தன்னிலே வைக்கின்ற
வள்ளலே யானைமுக [1]வரதநற் பயனே
நாரிபா கன்திருக் கொம்பனைய நம்பியே
நாளுமடி யார்கள்வினை போயகல வேணும்
பாரிதா யெம்மைப் பரிந்தென்று மாளுவாய்
பாரதங் கோடதனி னால்எழுது வோனே. 2

மட்டெனக் குற்றருள் சுப்பிர [2]மணி யப்பன்
மற்புயப் பொற்குற மடந்தைமீ தருள்வோன்
விட்டத்திற் பத்திவைத் தட்டமைச் சித்திர தமிழ்
வெற்பினிற் பத்திவைத் தேற்றுகா ரணனே
கட்டெனச் சர்க்கரைக் கொக்கமுக் கியகையில்
கொட்பரைச் சிற்பரத் துற்றவேள் முகனே
பட்டெனப் பொற்பரிக் கற்பகப் பிள்ளைபொற்
பக்சிசத் துற்றிறற் பக்திவைத் திடுமே 3

**வேறுசீர்**

திங்கட் செறித்தவட கொம்பைப் பிடித்துவளர்
செம்பொற் பொருப்பிலுற நம்பிப் பொறித்தவா
[3]வெங்கட் கழுத்தசுரர் மங்கிக் கெடச்செருவில்
வெம்பித் துறந்ததொரு தும்பிக்கை வெற்பே

---

1. வாச 2. மணி 3. துங்கக்களத்தசுரர்

சங்கைக் கரத்திலணி சங்கைத் தரித்தமுகில்
தங்கைச்சி தங்கவட [1]மங்கைக்கு மதலை
கங்கைச் சுளிச்சடைகொள் எந்தைக்கு மைந்தனே
கம்பக் கரிமுகவனே காத்தருள் வாயே. 4

இந்தைத்திற லங்கப்[2]புண ரங்கப்பிரி யன்புற்று
இன்புற் றடைந்தசடை யன்புற்ற மதலாய்
திந்தொத்த மென்றொத்தி என்றொத்தி [3]அம்பொற்
சிலம்பைப் புலம்பவரு சேவடி யோனே
வந்தொத்த சந்தத்திரள் வம்பட்டொரு துய்ய
வங்கப்புணர் செங்கைச்சிலை துங்கக்கரி முகவா
கந்துற்ற சந்தத்திரள் களம்பற்றி யன்புற்று
கஞ்சப்புவி வாழும்கற் பகப்பிள்ளை யாரே. 5

**வேறுசீர்**

மத்தகனை விகடதட கடகசெந் தூரனை
மால்மரு கோனைமயி லேறிமுன் னோனை
வித்தகனை கனக[4]சா மரைகள்போ லென்னை
விரதணன் குலதிலக வேள்தன்மைத் துனனை
அத்திதனை யன்றுரித் தம்பலத் தேயாடும்
அரனார்தன் மதலையை ஐங்கரத் தோனை
முத்திதரு வேழமுக னைப்பழ மருந்தியை
முந்தியே பாடவினை சிந்திஓ டிடுமே. 6

முண்டக மலர்ந்ததுபோ லேதிரு முகத்தனை
முடியவுங் கமலமலர் தேடியுங் காணா
அண்டர்தொழு தம்பிரான் என்தம்பி ரானே
ஐங்கரனே துங்கமத ஆகுவா கனனே
[5]வெந்திறற் சூலமும் பாசமுங் கைக்கொண்டு
வெங்கால தூதர்கள் வந்தாலு மிப்போ
தண்டையுங் காலுஞ் சதங்கையு மாய்வந்த
தம்பி[6]கண பதியேநீ அஞ்சல்என் னாயே. 7

---

1. மங்கச்சிகமலை
2. புணர்ங்கப்பி யன்புற்று
3. ஏடுபல்
4. சாய்மரைகள்
5. வேண்டியே
6. கணபதியேநீ

மாதுலஞ் சேர்காவல் மாறாமல் மாறியிட
[1]மாயையாய் வந்தகலை யூர்தியை நிறுத்தி
ஆதவர்க ளுய்யவே பூதனை முலைப்பால்
ஆவிய தருந்திஉழல் சகடற வுதைத்து
மோதுமத மாமோது மல்லரை முருக்கியிடர்
முன்னின்ற மாமனை முடித்தலை துணித்தே
பூதல மதிக்கவரு மாதவா கேசவா
புன்னலை நாரணா பொதுவர்நா யகமே. 8

கேசவா என்றமொழி [2]நாமுமுரை செய்திடில்
கேடகலும் அவ்வுரை கேட்டிருந் தோரும்
நாசமிலை யாரேனும் ஆயிரந் திருநாமம்
நவில்இந் திரர்பதம் நல்கிடும் பெருமை
தூசுரர் தெலுங்கர்மக [3]தேசர்பன் னிருநாடர்
துளுவர் [4]கங் காளர்மழு வர்சீனர் கபிலாட
பூசுரரொப் பாதவர்கள் புகழவரும் அச்சுதா
புன்னலை நாரணா பொதுவர்நா யகமே. 9

வந்துமுன் னேநடன சகலகலை வல்லவீ
சக்ரவட மீதுகண் வளருந் தலைவி
உந்திமலர் [5]மீதினில் உதித்தவன் தலைவி
ஒளிசிறந் தருள்பளிங் கொத்தவள் நிறத்
இந்துநுதல் வஞ்சரசி யேஉனை நினைப்பவர்க்கு
இயலாக பாடவரம் இனிதினருள் வாயே
சிந்துசாகை புழுகுபன் னீர்களப கஸ்தூரி
சுற்றுங் கருங்குழற் சந்தசரசு பதியே. 10

1. மாய்கையாய்
2. நாமமுரை
3. தேசகன்னிருநாடர்
4. கங்காரர், காந்தாரர்
5. வளருமது லீலா
**செய்.**10. வல்லவீ - வல்லவளே

பரகதியை யாவிலுற நாவிலும் நிறுத்திய
பங்கயச் செல்வியைப் பவளவா யாளைக்
[1]கருதில்வரு பிழையேது போதுகண் ணாளைக்
கற்பூர மேனியழ கொப்பவரி யாளைக்
கருமுகி லனையமைக் குழலியைக் குங்குமப்
[2]படியிரு சங்கிராமப் பாரமுனை யாளைச்
சரஸ்வதியை யென்னுடைய நாவிலும் கனவிலும்
தமிழ்வளர்த் தாளையொரு சற்றுமற வேனே 11

இதம்பட இரண்டருகு வேதமிசை பாட
இளங்கமுனு குங்கும குளிங்குமுக மென்ன
சதங்கையொடு தண்டைகள் அலம்பவடி மீதே
சலஞ்சல [3]சலமெனும் கோடுகள் ததும்ப
பதங்களொடு தொந்ததோம் தொம்மென விசைப்ப
பதஞ்சலி வியாக்கிர பதத்துமுனி காணச்
சிதம்பர சிதம்பரவெ னுங்கொடிய வன்கோடு
திரண்டடசி வந்தவினை சிந்தியோ டிடுமே. 12

கப்பான சூலந்தனைக் கொண்டு குத்தியே
காலன் கயிற்றினாற் கட்டிப் பிடித்து
தப்பாம லுயிர்வந்து கொடுபோகு முன்னே
தாடான மயிலேறி வரவேணும் முருகா
முப்பாலு மொக்கக் கலந்துதவு தேனே.
முருகேச னேநல்ல முத்திக்கு வித்தே
அப்பா திருச்செந்தி யீசாவடி வேலா
அடியேனை வினைவந்து அணுகாமற் காப்பாய். 13

தடவரைகள் கிடுகிடென வடவைமுக மதனில்
சஞ்சலப் படமுடி சற்பரா சன்றன்
உடலது நெறுநெறென விழியது பிதுங்கி
உலகுதிசை கிடுகிடென உம்பருக் கெல்லாம்.

---

1. கருதிலிவையே பிழையோகு 2. பாடியிரு சங்கிரமப் 3. சலானும்

அடையலர்கள் பொருதுடைய [1]திமிலமிடை யிந்திரன்
அழகுசெறி அழகுபுய மானமயி லேறிக்
[2]கடவியிலே வடிவுடைய வடிவேலை ஏவுநற்
[3]கந்தர்திரு மலரடிகள் கனவில்மற வேனே. 14

கருணைகொண் டெதிர்மலைந் திடுசூரன் பொடிபடக்
ககனமெண் டிசையிலுங் கழலினை நினைந்து
உருகுமன் பர்கள் மனம் பரமடைந் திடநினைந்து
உலகுதனி லுனையன்றி [4]யொருதெய்வ முளதே
முருகுசெறி கொக்கொட்டிச் சோலைநகர் உள்ளாய்
முந்துதவு ஐந்துகர வைந்துநிற வண்ணல்
இருபதமும் அருள்பரவு தான்தோன்றி மப்பனார்
என்னவினை [5]முன்னமுதல் இருபதமு மறுமே. 15

நாடோறும் அமுதாகி நன்கோயி லுள்ளே
நற்றேகிப் பின்நின்ற நவரெட்ண மலைபோல்
[6]காடுசெறி வள்ளிமலை தேடியிரு தாமரைக்
கால்நோக வந்ததொரு கடவுள்வே லவனே
தோடேறு மதுவுண்டு வண்டினம் மகிழ்ந்தேறு
சுருதிபா டும்கடம்பின் தொங்கலணி மார்பா
மாடேறு சிவயோகி மகனாகி யவனே
வளர்தோகை மயிலேறி வந்துமுன் னடவாய். 16

**வேறுசீர்**

பலகனிகள் சொரிதினைகள் விளைபுனம தடரும்
பகர்கிளிகள் புறவினொடு கலைகள்கடி கூர
அலைகயலை நிகரனைய கலகவிழி வள்ளியார்
அவரைமண மருளவொரு தவசிவடி வெனவே.

---

1. நிமிலமிட இந்திரன்
2. கடகளிறை
3. கந்தரிட
4. ஒருவர் பிறிதுளரோ
5. முன்னவினை
6. காடேறும்

வலைகுறவர் எதிர்கிழவர் எனுமிகுதண் [1]அடிபூதிபூசி
வரும்அவர்கள் இருகைதொழு வளமைகொடு தொடுபார்
உலகுபுகழ் செறிகதிரை நகரில்வரு குமரன்
ஒருமுருக னென[2]வினைக ளுறுதிசெடி புகுமே. 17

திருவையுமை யவளும்வேள் விடையரனு மொருநாள்
தெளியஉப தேசமறி வடவைமுக மதனில்
கருவரிய மதுகரம் தேனுமைக் குழலின்மிசை
சொலுமொழிகள் இருசெவியில் விழஅரனு முனியச்
சருவலையில் மிசையெறிய மகரமொடு வலைகயிறு
தனையுமிகு தவிடுபொடி செய்துஉயர் வரையை
உருவஅயில் விடுகுமர னுறுதிசெறி கதிரைநகர்
ஒருமுருக வெனவினைகள் ஒருவியோ டிடுமே. 18

**வேறுசீர்**

மூவா யிரத்தொருவ ரானசிவ னிங்கே
முப்பத்து முக்கோடி தேவர்களு மிங்கே
பாவாண ரைப்போய் அழைத்தசிவ னிங்கே
பஞ்சவர்கள் வந்தடி பணிந்தசிவ னிங்கே
நாவாணர் தன்கலி தணித்தசிவ னிங்கே
நாரதரை ரெட்சித்த நான்முகனு மிங்கே
தேவாதி தேவனார் மாடேறு மீசனார்
செல்வனார் வாழ்கின்ற சிவலோக மிதுவே. 19

**வேறுசீர்**

பருவகம் புயதனம் பொலியுமங் கையரிடம்
பலவிதந் தனில்விழுந் தகமெலிந் திடுமேனும்
குருவெனும் அருள்நினைந் திருபதம் பெறவேணும்
கொடியமலந் தடியவந் தடிமைகொண் டருள்வாய்
இருதடங் குவடுதன் கிரியெழுந் துலகில்வந்து
இலகுசெஞ் சடையிலம் புலிபுனைந் திடுவோன்
திருவுநம் பலவுமம் பிகைநடந் திடநடம்
திகழ்பொனம் புரிதொழுஞ் சிவசிதம் பரமே.

---

1. அடிவிபூதி 2. வினைகளுதறி யோடிடுமே **செய்.** 19. சில ஏடுகளில் இல்லை.

மாறுபடு சூரனை வதைத்தவே லொன்றுண்டு
வள்ளியிரு கொங்கையை மணந்தபுயம் உண்டு
ஆறுமுக வேடுபர்கள் அடிபரவு தாளுண்டு
அதுவன்றி யேநமக் காறுமுக முண்டு
தாறுசெறி யுங்கமல வூர்திசெறி யுங்கதிர்
காமநக ருண்டுசர வணைப்பொய்கை யுமுண்டு
ஏறுமயி லுண்டுபடை வேலுண்டு யாமுண்டு
இனிமறலி படைகள்வினை என்செய்ய லாமே. 21

மன்னும லர்ப்பாதி மாதங்கி திரிசூலி
மாகாளி மாதருக் கரசான தாயார்
மின்னுமணிச் சிலம்பொன்று கரமீதே பெற்று
வீரமுட னேபணிந் தாரமுட னேந்தி
தென்னன் தெறித்துவிழ நூபுரங் கொண்டு
சிக்கெனவே படிஅடித் தக்கினி எரித்த
கன்னங் கறுத்தமுகில் ஒத்த [1]குழ லம்மையென்
[2]கண்ணகைதன் இருபாத கமலமற வேனே. 22

திங்கள்போ லுந்திரு நுதலையுடை யாளைச்
செந்தா மரைமுகத் தாளைஒப் பாளைப்
பொங்குபுக ழாலுயர்ந் தபொற்றி ருவைப்
பொய்யென்ன மெய்யாக வந்துதித் தவளைத்
தங்கள்பழி கொள்ளென்று பாண்டியன் முன்னே
சத்துரு தனைமுடித் துயிர்மீள வந்து
[3]அங்கணாமைக்கடவைதன்னில்வாழ்கண்ணகையார்
அடித்தாம ரைப்பாதம் நாளும்மற வேனே. 23

உன்னைநெஞ் சாரவே நினையாத வாறோ
ஓதுமறை யோனெழுதும் ஊழிவினை தானோ
என்னவினை யென்றறியேன் எனது சென் னிக்குள்
எய்திய பிணித்துயரம் நிகளைந் தருள்வாய்

---

1. குழலம்மைதன்
2. கண்ணகையை அநவரத காலமய ரேனே
3. அங்கணா மக்கடவை வாழ்கண் ணகையதன் க - 27

தென்னவனை யன்றுபழி கொண்டதிரு மாதே
தேசிகர் குலத்திலே வந்ததென் னமுதே
அன்னநடை மாமயிலே தெய்வநா யகமே
அங்கணா மைக்கடவை மருவுகண் ணகையே 24

சிவனா ரிடத்தனி லிருந்துவிளை யாடியே
சிலநாளில் ஒருபொழுது சிந்தையில் நினைந்து
பவமான பிணிதீர்ப் படிமீதில் வந்து
பாண்டியன் கூடலின் உள்ளே புகுந்து
தவமான மானாகர் மகளான கண்ணகை
தாரணி தனக்கொரு காரணம் தான்
நவமான அங்கணா மைக்கடவை வாழ்கின்ற
நாயனிதன் நாமமொரு நாளுமற வேனே 25

வட்டவா ரிக்கடல் சூழ்உலக மீதினில்
வாழுமூ லத்தான் தேவதைக் கெனவும்
இட்டமாய் நற்கனிசொ ரிந்திடும் பெண்பனையை
இன்றுமுதல் ஆண்பனைய தெனநினைந் தவளே
பட்டதொரு கோவலனை யும்பிழைப் பித்தாய்
பாண்டியனை வென்றுபணி மீண்டுபுகழ் கொண்டாய்
மட்டுலவு சோலைசூழ் அங்கணா மைக்கடவை
மருவுகண் ணகையையொரு நாளு[1]மய ரேனே 26

வண்டைநிக ரானவிழி கண்டைநிக ரானமொழி
வாலைமதி சேர்நுதல் மடந்தையர்கள் கூடி
[2]தண்டிய வழக்கதனம் இன்றுசெய் பாண்டியன்
தன்னைஎரி செய்திடையர் தன்சேரி காப்பாய்
எண்டிசையில் மன்னர்பரி வாரமோடு போடிமார்
இயல்வீரர் மற்றுமுள வெல்லோரும் நாளில்
கண்டுபணி கின்றதொரு காரேறு சோலைவாழ்
கண்ணகையை யனவரத கால[3]மய ரேனே 27

---

1. மறவேனே 2. தண்டி கை வழக்கிதனை மிண்டுசெய் பாண்டியன்
3. மறவேனே **செய்.** 24. தேசிகர்குலம் - செட்டிகுலம். கண்ணகை வழக்குரையிற் பல இடங்களில் இச்சொல் இப்பொருளிற் பயின்று வந்துள்ளது.

வாசமலர் மருவுகோ தைமா னனையவிழி
    மாதரார் தான்மருவு மாலைதா னகல்வார்
நேசமா மதில்களெழில் வேயனே யுனதுபதம்
    நீடுமா தவப்பெருமை கூறுவா ரகல்வார்
தேகலா வியவிழி ஓரமரோ புகழவரு
    சீதளம திகளெழில் தேவர்நா யகனே
ஆசையா லுதவியகண் நேசனே தான்தோன்றும்
    அப்பனே அடியவர்க் கருள்கோணா தவனே. 28

[1]சிலையொத்த புருவத்தி கயலொத்த நயனத்தி
    தெரிசித்திர வடிவேற்பொரு திருமுத்து நகையார்
மலையொப்பென நவரெத்தின வடமிட்டிடு தனத்தி
    வனசக்கொடி யிடைச்சி மதுரச்சொல் லழகார்
அலைவுற்றிடு மிடிமிக்குள அவையுற்றட ரும்மிக்க
    [2]அடிமைகளும் நின்கழல் நித்தம் நினைவார்
கலைமுத்த மிழ்மிகுத்த காரேறு சோலைவாழ்
    கண்ணகையை நெஞ்சினில் கருதவினை யறுமே. 29

அரவின்மணி யாலே சமைத்த[3] பொன் னூபுரம்
    அன்றுமது ரைப்பதியில் விற்றகோ வலரைப்
பெரியமழுவாலே பிளப்பித்த பின்பு
    பேசரிய வல்வழக் குப்பேசி வென்று
திருகிவல முலைதென்னன் மேல்விட் டெறிந்தே
    சினமாறி யே இடையர் தெருவீதி வந்து
கருதரிய காரைநகர் தன்னில்வாழ் கின்ற
    கற்புடைய கண்ணகை தனக்கடைக் கலமே. 30

பொன்னுலவு வணிகர்குல திலதமென வேவந்த
    புருஷர்கோ வலர்கையில் பொருளுள்ள தெல்லாம்
மின்னுலவு மாதவி தனக்களித் தேமீள
    மிக்கதொரு [4]மணிச்சிலம் பைக்கொண்டு சென்று

---

1. சிலையுற்ற
2. அடிமைக் கடலினிற்க வரம்நித்தம் நினைவாய்
3.4. பொற்சிலம்பை

தென்னுலவு எழுதியைக் [1]கொலைபடுத் தினைமுனை
திருகிமது ராபுரி எரித்தகற் புடைய
கானலெனு மென்மொழித் துடியிடைக் கயல்விழிக்
காரைநகர் அகலாத கன்னிகண் ணகையே 31

பொற்புலவு வணிகர்குல மின்னாகி மாறனைப்
[2]புழ்வழக் கிட்டனல் புகைகொண் டெழுப்பு
வெற்பனைய வடகரைய தாறுநூ றாயிரம்
மேற்கோடி ராசர்தமை வென்றுகைக் கொண்டு
கற்பதனை [3]உயர்வான இளங்கோ வடிகள்
[4]சொற்கொண்டு தாபித்த கருணைமட மயிலே
கற்கரட விக்கிரம உக்ரமுக மின்னே
காரைநக ரகலாத கன்னிகண் ணகையே. 32

மேருவரை யுற்றதன பாரமா தவிதந்த
மெய்யன்பு தீரவொரு கைமுதலில் லாமல்
பாரமா நூபுரம் தனைவிற்க வென்றே
பன்னுதமிழ் மதுரைமன் பதியதனில் வந்து
மாரவேள் ஒத்தவடி வானகோ வலன்றன்
மதுரைமன் கொன்றபழி வாங்கிவரு கின்ற
காரைதீ விற்கோயில் கொண்டுவாழ் கின்ற
[5]கண்ணகை கமலபதம் கனவிலுங் கருதுவனே. 33

மட்டுலவு பொற்பரி புரத்தைமது ரைப்பதியில்
மாறுமுயர் செட்டியை வதைத்திட அறிந்தும்
இட்டபெரு மட்டகிரி யைச்சரிசொல் வட்டமுலை
யைத்திருகி விட்டுநகர் சுட்டர சழித்தாய்
பெட்டெனைய கத்தடிமை யைப்பணி விடைக்குதவி
இடைச்சுவடு தன்கிருபை நின்கருணை புரிவாய்
கட்டுட னடக்குமுயர் காரேறு சோலைவாழ்
கண்ணகையை நெஞ்சினில் கருதவினை யறுமே. 34

---

1. கொலைபடத் தனதுமுலை; கொலைபடுத்தினைமுலை
2. புகழ்வழுக் கிடஅனல் கொண்டழல் பரப்பி 3. உளதான 4. கற்கொண்டு
5. கண்ணகை கமலமலர் கனவிலும் மறவேனே

கார்பெற்ற விரிதிரைக் கடல்மீது பெட்டகம்
கண்டுமா னகருடன் மாசாத்து வாரும்
நேர்பெற்ற பெட்டகம் எனக்கெனவும் உள்ளான
நிதியெனக் கென்னமா னாகரு முரைக்க
பேர்பெற்ற மாசாத்தா ரைக்கண்டு நாணிமிகப்
பின்னிடவும் மானாகர் முன்னிட மயக்கி
சீர்பெற்ற தம்பிலுவில் நகர்வாழ வருகின்ற
செல்விகண் ணகையையொரு நாளுமற வேனே 35

அரிபிரமர் தொழவரிய அருள்ரூப மாய்வையை
ஆறதை அடைக்கமண் ணதுசுமந் தவனைக்
குருசிலென மதியாமல் முதுகுற வடித்த
கோமகனை மதுரைசுட் டதிரவிட்டவளே
தரிசுபுனை பரிபுரச ரோசரசப் பாவை
தன்னையன் றித்தாம ரைதனி லிருந்தும்
கருதுதமிழ் வளமைசெறி வீரமுனை வாழவரு
கண்ணகையை கனவரத காலமய ரேனே. 36

சேரமுனை யிற்திரவி யங்களோடு இனிய
மாதவிக் களிக்கமுட் டெனமறிப் பிடவே
ஆரமுனை யிற்சவடி பொற்பணிகள் செப்பிலிட்டு
அவர்கையிற் கொடுவென்ற அன்னமின் னிடையே
[1]பாரமுலை யைத்திருகி மாறனை வதைத்துமுன்
பணிவார்கள் பிணிதீர வருபேடை மயிலார்
வீரமுனை யூர்வாழ வருகின்ற கண்ணகை
மென்கமல பாதமொரு நாளுமய ரேனே. 37

கட்டியா முயர்பொன்னி ஆறுதனில் மூழ்கியே
தோகைமா தவி [2]மைய லாற்றிஓர் புதுமை
எட்டியே நீர்ச்சுழியில் வண்டுபூ வாசத்தை
இனியுண்ப தற்குவமை ஏதெனப் புகல்வீர்

---

1. மாரவே ளொத்தவடி வாகிமொழி கரும்பார்
2. மயிரொற்றி

செட்டிதனை ஓர்மொழியில் அன்றகற்றியிட அம்மை
    சிந்தனையுற் றிங்குவா வென்றழைத் தருளும்
பட்டிமே டதனில்வாழ் கின்றகண் ணகைதிருப்
    பாதமலர் நாவிலொரு போதுமய ரேனே. 38

வில்முனை நிகர்த்ததிற விழிமுத்து நகைச்சித்திர
    மிகரெட்ண மணிசெப்பு முலைமிக்க தமிழார்
சொல்முனைய தென்னதோர் கட்டுட னடக்கும்
    சுகமுற்று வாழ்வுதர வருபொற்கொ டியனையார்
நெல்விளை மிகுத்தறம் பெருக[1]முக் கியர்வாழ
    நித்தமும் திங்கள்மும் மாரிபொழி கின்ற
கல்முனை நகர்க்குள்வாழ் கின்றகண் ணகைதிருக்
    கமலபா தம்கனவி லும்கருதி வேனே. 39

எத்திசையும் மெய்க்கவே தேருடன் திருநாள்
    என்றுமோ ராண்டினில் நடத்தியா வரையும்
குற்றமற முக்குகர்கள் எல்லாரை யும்தினம்
    குறைவற நடத்துமொரு குணரெட்ண மயிலே
கொற்றவனை வாதாடி அன்றுமென் றேஆயர்
    கோமளை அஞ்சல்என் றிடும்அன்ன மின்னே
உற்றபுகழ் சேர்கின்ற வெற்றிசெறி பாண்டிருப்
    பூர்வாழ வந்தருளும் உலகமா தாவே. 40

காரணி நாரணி காளிகங் காளி
    கண்ணன் சகோதரி வண்ணமா மாரி
பூரணி முக்கண்ணி வேதநா யகியே
    புகழான மானாகர் மகளான திருவே
ஏரணி முக்கண்ணி வேதநா யகியே
    ஏழையடி யார்கள்வினை ஈடேற்றி வாயே
வீரமா காளியே தெட்சணா காளியே
    மேவரிய கல்லாறு வாழும்நா யகியே. 41

---

1. மாநிலம் **செய்.** 38. சில ஏடுகளில் இது 35ஆம் பாடலாக உள்ளது.

புகழான மானாகர் மகளான திருவே
பூவையே உனைநினைந் திடில்வந்த வினைகள்
துகள்போல வேபறந் திடுமுனது கற்பால்
சுந்தரம் சேர்கின்ற சந்தனக் கிளியே
நிகழாமல் அடியேனும் அடியவர் தமக்கின்று
நிறைசெல்வ மேகொடுத் தருள்வந் தவளே
மகிழூரின் நகர்வாழ வருகின்ற கண்ணகை
மலரடிகள் ஒருபொழுதும் மனதில்மற வேனே 42

இடமிகுபொன் னாடரங் கதனில்மிகு சோழன்முன்
எழில்கொளணிக் கோலமும் பூட்டிமா தவியும்
குடமுலையில் மேல்நிறைந் திடுவடமு லாவுமுன்
[1]குதிகள்செய் நாடகம் கண்டுகோ வலரும்
மடமினுடன் ஆசைகொண் டரிவைதெரு வீதிமுன்
வருகளம தாகுமென் றிடமன மகிழ்ந்தே
திடமடைவ ரால்உயர்ந் திடும்எருவில் மேவுசெந்
திருவைஒரு நாளும்என் சிந்தைஅய ரேனே. 43

சிந்தைதனி லேஅதிக கோபமது கொண்டு
செப்பரிய ஆயர்மனை தனையும்விட் டேகி
வந்துமன வேகமுடன் பாண்டிய னிடத்தில்
வாதாடிநின்றுபரி புரமதை எடுத்து
பந்திதனில் நிற்கின்ற பாண்டியன் றன்னையும்
பண்பில்லாத் தட்டானை யும்எரி செய்த
கந்தமிகு களுவாஞ்சி நகர்குளக் கட்டில்வாழ்
கண்ணகை என்னவினை காதமோ டிடுமே. 44

தாயும்நீ தந்தை நீ அல்லாம லெங்களிட
சஞ்சலந் தீர்ப்பதற் கேயொருவ ருண்டோ
நீயல்லால் வேறுதுணை தமியேனுக் குண்டோ
நிச்சயம் தாகஅருள் தந்துதவி புரிவாய்
ஏயதோர் செல்வமும் செந்நெல்லின் விளையும்
இன்பமுட னேதந்து எங்கள் துயர் தீர்ப்பாய்

1. குதிகொள்செய்

காயம்பூ மேனியன் தங்கையென வந்தநீ
கனுவாஞ்சி நகரிலுறை கின்றகண் ணகையே 45

கொந்துலவு தாதிநங் கோவலரும் அப்போ
குலவுபெறு சிலம்பது விற்கவரும் நாளில்
இந்துலவு கண்ணகைக் கடையாள மெனவே
இயல்புபெறு மல்லிகைப் பூவொன்று நல்கி
சந்துலவு குடங்குணக் கேவந்த போது
தயங்கிடு மெனச்சொன்ன சபதம தறிந்து
னிந்தையுட னேகனவு கண்டபத் தினியே
விரைவுகளு வாஞ்சிநகர் மேவுகண் ணகையே 46

கருதரிய வேங்கைமா மரநிழலின் கீழே
கவலையுறு கோவலர் இருபிழப் பதனை
திருவனைய மதுரமொழி சரடூசி கொண்டு
சேர்த்தெழுப் பிச்சொன்ன செய்தியை அறிந்து
கருனைய பொற்சிலம் பதுதனை யெடுத்துக்
கவர்ந்ததட் டானையும் பாண்டியன் றன்னையும்
மருவரிய வெற்றிகொண் டிடுமானே மின்னே
மகிழ்வுகளு தாவளை வந்தநா யகியே. 47

ஏற்றமுட னேஇடையர் வேண்ணையது தடவ
இடதுமுலை யைத்திருகி மதுரைசுட் டழித்தாய்
தோற்றமுட னேபுவியில் வைகாசி பூரணைத்
தொகுதிபெறு திங்கள்தனில் நான்வருவே னென்று
உற்றதொரு பூசைக ளுகந்துலகு தன்னில்
அதிகவர மானது கொடுத்தருளி யேதான்
இட்டமுட னேபழு காமநக ருறைகின்ற
இயல்பெறுகண்ணகையையென்னாவிலயரேனே 48

மானமுறு மதுரையை அழித்துவரும் நாளில்
மனதினில் தணல்வேகம் அறியாத வண்ணம்
ஆனதொரு கன்னியர்கள் எழுவரும் கூடி
ஆடலது மஞ்சலின் தேறது எடுத்து

தானமுட னேழுபேர் வெற்றியது கண்டார்
      தையலின் கோபமது தானகன் றிடவே
தேனமிர்த மொழிமாதர் உறைகின்ற தேற்றா
      வெனுந்தீவு புகழவரு செல்விகண் ணகையே. 49

[1]கலையுநீ சமயங்க ளானதொரு பொருளுநீ
      கயிலாயர் பாகநீ குயிலார் மொழிச்சிநீ
அலைசேர் மடந்தைநீ அரியா சனத்திநீ
      ஆங்கார றீங்கார ஓங்கார மானநீ
குலமான கோவலரைத் தேடியே வந்தநீ
      கூடல்மது ராபுரி வளத்தை யழித்தநீ
தலமான செட்டிபா ளையமீதில் வளர்கின்ற
      தையல்கண் ணகையைஅநு தினமும்மற வேனே. 50

மறவாம லனுதினமும் முனைநினைப் பவர்நமக்கு
      வந்தபிணி நோய்கிரம தீவினை யகற்றித்
திறமான வாணிகேசர் குலமாக வந்தநீ
      திந்தோ மெனநடன மாடுமுத் தமிநீயே
குறையாமல் முத்தமிழ்க் கேஅருள் கொடுக்கும்
      குங்குமச் செல்வியே குமுதவா யாளே
நறைமேவு செட்டிபா ளையநகரில் வாழ்கின்ற
      நாயகிதன் னாமமொரு நாளுமய ரேனே. 51

மலர்மேவு குளிர்சோலை வளர்கோல மயிலார்
      [2]வருகீத மொழிஓசை மருமேவு குயிலார்
தலமேழு மறிவான வணிசேகர் குலமீது
      தனிலேயோ ரவதார மெனவாழ்பெண் ணரசார்
பலமேளம் உயர்கீதம் முரசோடு தவில்தாரை
      பலநாத சுரஓசை பலநாளு மதிர
நலமேவு செட்டிபா ளையமீதில் வாழ்கின்ற
      நாயகிதன் னாமமொரு நாளுமய ரேனே. 52

---

1. கலையான சமயங் களுமான நீ
2. மரமேவு குயிலோசை வருகீத மொழியார்

கருணைமுகில் மாவில்வடு வாகியே மீனவன்
கண்ணையூ னாகவே காரியாய் நின்றாய்
தருவனைய கணிதர்வந் தெண்ணியே பார்த்தபின்
[1]தையலிவ ளால்மதுரை தானழியு மென்ன
மருவனைய காவேரி தனிலடைய விட்டபின்
மானாகர் மகளென வந்தவ தரித்தே
செருவனைய கோவலற் கேபாரி யாய்வந்த
செட்டிபா ளையமேவு செல்வமா தாவே. 53

[2]கற்பதற் பாஷையும் கல்லாமல் அறியவும்
சத்துருவை வெல்லவும் சித்துவிளை யாடவும்
[3]நற்பரி புகுதவும் பெருவாழ்வு கூரவும்
நல்குமே யுன்னை நினைப்பவர்க் கெல்லாம்
பொற்பணி பாரம் பொறாதசிற் றிடையே
பூவரக மேவு தொழுவரிடம் புரிவாய்
கற்பக விருட்சமே சொற்பகங் கிளியே
கன்னியே புதுவையுறை கண்ணகைத் தாயே. 54

சோடசக லாமதிய மென்ன அழ கெறிப்பச்
சோதிமுக மண்டலமும் மகரகுண் டலமும்
ஏடவீழ் பசுங்குமுத அமிர்தவா யழகும்
இன்பமங் கலநாணு மிருகுவளை விழியும்
பாடகமும் நூபுரமும் இட்டபொன் னடியும்
பச்சைப் பசுந்தோடும் பத்தினியா ரெனவே
பீடதா மரையுமெப் போதுகண் டுய்வேன்
பேடையே மகிழடித் தீவில்மா தாவே. 55

எண்ணமுறு பரிவார வீரர்களு மேதழைத்து
எழில்பெற்ற ராசசிங்க ராசனும் வாழத்
திண்ணமுற வேபுவிக ளேழுந் தழைத்திடத்
திங்கள்மும் மாரிமழை பொங்கிமிக எங்கும்
[4]வண்மை யுள்ளமுக் குகர்கன்று காலியும்

1. தையலா லிம்மதுரை தானழியு மென்று 2. கற்ப 3. நெற்பரி
4. வண்மையுள்ள வணிகர் வேளாளர் மிகவாழ

வாழவே வரமருள வந்தமண் முனையூர்
கண்ணகையை என்னுடைய கனவிலும் நாவிலும்
கருதவினை யொருகோடி காதமோ டிடுமே. 56

குங்கும மலர்க்காவில் வண்டிசைகள் பாடக்
கூவுகுயில் மாவின்மிசை யேயிசைகள் பாடச்
சங்குமறை நால்வேத முத்தமிழ்கள் பாடச்
சத்தமுள கடலேழும் [1]ஒன்றென முழங்க
மங்கையர் மலர்க்கைகொடு பணிவிடைகள் செய்ய
வாணர்கவி பாடஇசை பாடமங் கலமும்
பொங்குபுகழ் வந்தாறு மூலைநகர் வாழவரு
பொற்பாத மெனவினைகள் அற்றோடி விடுமே. 57

மந்தார மானதொரு வெள்ளம் பெரும்புயல்
மைக்கட லுங்கரிய வானிடி முழக்கும்
சந்தாப மாகிய பெரும்படைகள் நோய்பிணி
சகலவினை இடையூறு சண்டைகல கங்கள்
வந்தாறு மூலைப் பதிக்கொன்றும் என்றும்
வாராம லேகாத்து ரெட்சிக்க வேணும்
செந்தா மரைத்திருவே யன்னநடை யாளே
செகதலத் தோர்கள்வினை தீர்த்தமா தாவே. 58

கொந்தாடு மதுமலர்க் குழல்விரித் தாயே
கோவலன் படுகளந் தனில்நடந் தாயே
அந்தோ எனக்கதறி யழுதுநொந் தாயே
அவ்வணிக னுக்குயிர் கொடுத்தளித் தாயே
செந்தாடு மதுரைநகர் தீயெரித் தாயே
தென்னவன் உயிரழிய வேசினந் தாயே
வந்தாறு மூலைநகர் வாழவந் தாயே
வல்வினை தணித்தகண் ணகைஎனும் தாயே. 59

உற்றபுகழ் சேர்கின்ற செட்டிவெள் ளாளரும்
உயர்வுற்ற முக்கியர்க ளுடன்மற்று முள்ளோரும்

1. மெத்தென

கொற்றவர்கள் பரிவார வீரர்களும் ஆயிரம்
கோடிகா லம்வரை நாடியருள் புரிவாய்
பெற்றதொரு வேளாண்மை மிகவிளைய மழைவெள்ளம்
பெருகிமிக வாழ்வுபெற் றினிதாக வாழக்
கற்றவர்கள் வந்தாறு மூலைநகர் வாழ்கின்ற
கண்ணகையை யநவரத காலமய ரேனே. 60

செட்டிமா னாகர்மக ளாகவந் தாயே
தென்னவன் பதியழிய வேசினந் தாயே
வட்டமுலை யைத்திருகி விட்டெறிந் தாயே
மாசாத்து வார்மகனை நீயுகந் தாயே.
பட்டபுல வற்குநற் பயன்உகந் தாயே
பதியில் [1]நீ லாப்பழைப் பதியில்வந் தாயே
எட்டுவரை யுன்புகழ் விளங்கவந் தாயே
இனியகற் புடையகண் ணகையெனுந் தாயே. 61

சீர்வணிகர் பெருமான் சிலம்புவிலை கூறத்
தெருவினிடை தட்டானும் எதிர்கொண்டு வரவே
பாராளு மீனவன் கள்வனிவ னென்றே
பரிவோடு கொல்லவே வளவனெதிர் சென்று
ஏர்மேவு தன்கிரி யெறிந்துமது ராபுரி
இந்துகுல மன்னனை யெரித்தநா யகியே
கார்மேவு சோலைசூழ [2]நீலாப்பழை வாழ்கின்ற
கண்ணகை என்னவினை காதமோ டிடுமே. 62

வாரைநிக ராணவிழி மாதர்நட மாட
வண்டமிழ் தெரிந்துகவி வாணரிசை பாடப்
பூரையென வேஅரு கிருந்தவர் துதிக்கப்
பொற்செழியன் மீனவன் இருந்தகொலு மீதே
காரைநிக ரானக ருங்குழல் விரித்துக்
காவல னுடன்[3]பெரு வழக்கினை யுரைத்துக்

1. நீலாவணைப் பதியில் வந்தாயே 2. நீலாவணை 3. வழக்கெனவுரைத்து
**செய்.** 62. சில ஏடுகளில் இப்பாடல் “அக்கினி முன்னே எனும் 65ஆம் பாடலின் பின்னரே காணப்படுறது

காரைநக ராதிபதி யோர்பரவு மீசன்
காமன்கர் வாழ்குளக் கண்டியுறை மாதே. 63

சிதறுபொற் குழல்விரித் தனல்மடுத் தவளே
[1]திகழுபொற் பருமணித் தரிசிலிட் டவளே
வழுதியைக் கொலைபடுத் தனல்மடுத் தவளே
மதுரையிற் பரிபுர வழக்குரைத் தவளே.
புதுமணித் திலகமிட் டணிமுகத் தினளே
புயல்மழைக் கினியகற் புடைமடக் கிளியே
கதிர்மதிப் பிறையையொப் பெனுமுகத் தினளே
கதிர்நகர்க் கினியகற் புடையபத் தினியே. 64

அக்கினிமுன் னேபஞ் சிருக்குமோ வானத்
தருக்கின்முன் னேபனிகள் அண்டுமோ கண்டாய்
கொக்கினம் ராசாளி முன்னே யிருக்குமோ
கொற்றவன்முன் னேறுமா றிட்டகுடி உய்யுமோ
மிக்கதுணை நீயென்று நம்பியிசை பாட
வேளையென் றால்எனது வினைநோ யிருக்குமோ
தக்கபுகழ் மேவு[2]சா காமத்தில் வாழும்
தாயே தமழ்க்குதவு மூர்க்கமா தாவே. 65

வணக்கமுட னேமல்லி கைத்தீவு தன்னில்
வந்துநின் றெல்லோரும் மாதாவே யின்று
இணக்கமுடன் தேங்கா யொன்றுதான் வேணும்
எங்களா லேஇதற் கேதுசெய் வோமெனப்
பணப்படுவ தில்லையோ தேங்காயொன்று வீழப்
பண்ணுவாய் என்றுபல ரும்துதிப்ப வேதான்
கணப்பொழுதி லேதென் னங்கனியை வீழ்வித்த
கற்புடைய மூர்க்கமா தாவைமற வேனே. 66

பொன்னுலவு மேனியழ குங்களப முலையும்
புண்டரிக மொத்தமுக மும்புருவ அழகும்

---

1. திகழ்பொற் பருமணித் தவிசிலிட் டவளே 2. மாகாமத்தில்
**செய்.** 63. பூரை - நிறைவு, போதும், நன்று

மின்னுலவு சிற்றிடையி னிற்துகி லுடுத்த
மென்மையழ குங்கருணை வெண்ணகையி னழகும்
மன்னிய மணிக்கனக பூணார வழகும்
மைக்குழல் முடித்தவழ கும்வடிவு முடைய
கன்னியென வந்தெனது கண்ணைத் துடைத்த
கற்புடைய மூர்க்கமா தாலைமற வேனே. 67

தருவாகி யேமதுரை மீனவனை மாறுசெய்து
தண்டமிழ் விளங்கவொரு சங்கீத மானாய்
பொருநாத கீதவின்ப அவதார மாகியே
பூதல மதிக்கவரு பொன்னகர்த திருவே
ஒருநாளு மறவாம லேஉவந் தோர்கள்
உள்ளமதி லேஉறையு மோவியமின் னாளே
கருமாவை யன்றுரித் தோர்தமக் கன்பான
கண்ணகை நமக்குவெகு கருணைதரு வாயே. 68

அங்கணா மைக்கடவை காரேறு நகர்எருவில்
ஆனதம் பிலுவிலொடு வீரமுனை தன்னிலும்
[1]பங்குசேர் பட்டிமேடு உயர்செட்டி பாளையம்
வந்தாறு மூலையொடு மற்றுமுள பதியும்
திங்கள்நேர் ஒத்தநுதல் எங்குமீ திற்பெரிய
தெய்வீக மென்னவிளை யாடியெப் பொழுதும்
எங்குமாய் நிற்குமொரு [2]பங்கமா தின்பெருமை
எந்தனா விற்கனவில் என்றுமக லாதே. 69

பத்தியொடு தொழுவோர்கள் இடரகல வருள்கொண்டு
பண்டுசெறி தம்பிலுவில் பட்டிமா நகரம்
மொய்த்தபுகழ் வீரமுனை கல்முனைகல் லாறு
மகிழூர்செட்டி பாளையம் எருவில்மண் முனையூரும்
வைத்தமகி ழடிச்சோலை முதலைக் குடா
[3]வளமைவரு புதுக்குடி நகரமொடு வந்தாறுமூலை
இத்தனை தலங்களிலும் அங்கணா மைக்கடவை
எனவந்து காரைநகர் இனித்திருந் தவளே. 70

---

1. பங்கைசேர் 2. பங்கயமாதின்; பங்குமாதின்
3. வளமை புதுக்குநகரம் வந்தாறுமூலை

பட்டிநகர் தம்பிலுவில் காரைநகர் வீரமுனை
பவிசுபெறு கல்முனைகல் லாறுமகி ழூரெருவில்
செட்டிபா ளையம்புதுக் குடியிருப்பு மண்முனை
செல்வமுத லைக்குடா கொக்கட்டிச் சோலை
அட்டதிக் கும்புகழ் வந்தாறு மூலை
அன்பான சிற்றாண்டி நகரதனில் உறையும்
வட்டவப் பூங்குழல் மண்முனைக் கண்ணகையை
மனதினில் நினைக்கவினை மாறியோ டிடுமே 71

தவமான சிவசமய முறுதிருக் கோயில்வ
தருபோரை தீவுநகர் தான்தோன்று
சிவஞான குருநாதர் பூசனை புரிந்துபின்
திகழ்கதிர் காமநகர் தில்லைமண் டூரும்
புவிவாழி நீதிமனு நூல்முறைமை வாழி
பூதலம் வாழிபுவி யோர்களும் வாழி
உவராழி சூழ்உலகில் வருகாரை தீவுவளர்
உத்தமியும் வாழிநிதம் உதயகிரி எனவே. 72

**உடுகுச்சிந்து எனப்படும் ஊர்சுற்றுக் காவியம் முற்றும்.**

# அமரர். ஜெகநாதன் முத்தையா

மண்ணில் :11.06.1933 விண்ணில் :10.01.2022

யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி, வவுனியா மற்றும் சிட்னியை(அவுஸ்ரேலியா) வசிப்பிடமாகவும் கொண்ட அமரர். ஜெகநாதன் முத்தையா அவர்கள் நினைவாக....

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்தீர்..
பண்புடைமை காத்து பக்குவமாய் வழி நடந்தீர் ..
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்தீர்..
நல்லவராய் நாணயமாய் நடந்தீர்
துன்புற்றோர் துயர் துடைத்து துணைக்கரமாய் அடைக்கலம் தந்தீர்..

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்..
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும் ...
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்...

அமைதியின் உருவமாகவும்...
அடக்கத்தின் இருப்பிடமாகவும்..
பண்பின் பெருந்தகையாகவும்...
பாசத்தின் உறைவிடமாகவும்...
எம்மத்தியில் அன்பு ஒளியாக
இருந்த உத்தமரே...
மண்ணோடு உங்கள்
பூவுடல் மறைந்து விட்டாலும்...
உங்கள் நினைவுகள் எங்கள்
இதயங்களில் இருந்து
ஒருபோதும் மறைவதில்லை....

**- அமரர் ஜெகநாதன் முத்தையா**
**குடும்ப நினைவலைகளிலிருந்து**

## Celebration of Life : Jeganathan Muthaiyah



If I had to describe Ammappa in one word, it would be "proud". Ammappa was proud of his identity. He was proud of himself, proud of his wife, proud of his children, proud of his son-in-laws, proud of his grandchildren... he was proud of his family. He was a proud man, proud to be Tamil, proud to serve in the Navy, proud to own an A40 car. One of my favourite recent memories of Ammappa was a couple of years ago when we flew from Sydney to Melbourne together. After we landed, we stood at the back of the plane for about 10 minutes, waiting for the doors to open so we could get off. For 10 whole minutes, Ammappa talked to the Flight Attendant about me and his family. That was the moment I realised just how proud he was of his life, his family.

I admired the way he spoke eloquent English. Anyone who met Ammappa knows how well he spoke English, the way he elegantly articulated all his sentences. For 10 minutes he went on and on about just how proud he was of me. He told her that I wanted to be a doctor or a pilot and he also told her about how I would help him find medical books that he wanted to read. This was a perfect example of the type of person Ammappa was. He was extremely proud of his family and he would talk for hours about us whenever he got the opportunity to. Saying goodbye to my grandpa today is one of the hardest things I've ever had to do. I am Vinoj, his grandson, and on behalf of the rest of my family, we would like to thank you for being here today to celebrate Mr Jeganathan Muthaiyah's life.

We are gathered here today because he was an amazing friend to many people. It doesn't matter if you knew him for 20 seconds or 20 years, he would befriend everyone he met. That's just the type of person he was. Kind, friendly and very talkative. Today, I wish to share some words about the man who has been an integral part of my life. To say that I am lucky to be his grandson is an understatement. It is a blessing that I am truly grateful for and will be for the rest of my life.

We wish to celebrate a man whose entire life has been dedicated to his family. Ammappa was born in Neeraaaviyathi, Jaffna on the 11th of June in 1933, Son of Muthaiyah and Vallipillai, brother of Ramanathan, husband to Parameswary and brother-in-law to Sivanesan. He was the father of 6; Jeyabalan, Jeyanthi, Shanthi, Chithra, Suganthi, Gajanthy. Grandfather to 14: Jennifer, Jerren, Jason, Lithurshan, Brintha, Dina, Vinoj, Vidula, Thivakar,

Thivia, Thulasi, Vignesh, Yaalini, Yatushan. And Great-grandfather to 3, Kayal, Seyon and Yatra. He was the Father-in-law to Shanthini, Skanthakumar, Mohanachandran, Jeyakumar, Sivakumaran and Ainkaran. Grandfather-in-law to Nirojan, Karthika, Bavan and Tharmika. He was also an uncle to Kannan, Ratha, Geetha, Gobu and Sutha. Ammappa finished his early studies in Jaffna and went to high school at St Xavier College in Mannar. After finishing his education, Ammappa joined the Sri Lankan Navy. In 1959, he married Ammamma in Alaveddy. Everyone in Alaveddy loved him. He was a very fun person and got to know everyone in town. He drove an iconic A40 car, and he would help everyone get from A to B in that car. They were happily married with 6 children. He was a loving father who worked hard to provide for his family and passionately cared for them. He ensured that every child received a good education and made sure everyone developed a good character.

Ammappa retired after 22 years in the Navy. He then worked as a medical representative at City Medicals for many many years. He was well known and respected over most of Jaffna by doctors as he would supply them all. As a result of the civil war, Ammappa and his family were displaced and moved to Vavuniya. There, he worked as a paramedic for an NGO that worked to remove land mines. In 2009, Ammappa migrated to Sydney, Australia to reunite with his wife and youngest daughter. He was a very faith-filled man and he regularly worshipped at Sydney Murugan Temple. Ammappa was an active member of the Tamil Senior Citizens. He would never miss a meeting, he genuinely enjoyed being a part of that community.


Ammappa loved to share his life experiences. When I was younger, I would ask him about his life, and he would tell every story with the most vivid detail. Hearing him talk about his childhood, the war, life in the navy and raising his family, it was like something out of a movie! I feel as if I could write a book about my Ammappa's life. He accomplished so much and meant a great deal to all of us in this room. He was enthusiastic when it came to storytelling.

Each of his grandchildren have their own special memories with him. As his grandchildren, we can only hope to tell the stories half as well as he did. Today, Ammappa's grandchildren will all share their own special stories and favourite memories of him. Hold on to the memories, they will hold onto you... and I will hold onto you. Thank you for your love, Ammappa. I had the time of my life, fighting dragons with you. I love you and I hope I make you proud.

- **Vinoj Mohanachandran**










11.06.1933 – 10.01.2022

அளவெட்டியூர்

**அமரர். முத்தையா ஜெகநாதன்**

நினைவாக

அனாமிகா வெளியீடு